வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**MCOP.No. 356 / 2022**

வழக்கு சாட்சி **RW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவக்குமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : ராமலிங்கம் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 14.08.2024 |

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் 1-ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் ஓட்டுநராக உள்ளேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

குறுக்கு விசாரணை:

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. 01.12.2021-ம் தேதி **T.N.65N.1265** என்ற பதிவு எண் கொண்ட பேருந்தில் ஓட்டுநராக பணியில் இருந்ததற்கு நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஆனால் நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரிந்து வருவதற்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை. அதை நான் நீதிமன்ற பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் குற்ற எண்.1220/2021 என்ற எண்ணிற்கு நான் தான் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் பேருந்தை ஓட்டி முன்னால் சென்ற இருசக்கரத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக எனக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் படி போலீசார் புகார்தாரர் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்து நான் தான் இந்த விபத்திற்கு காரணம் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.17 எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு நான் தான் முழுகாரணம் என்று குற்றத்தை ஒப்புக் கொண்டு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அபராதத் தொகை செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் குற்றத்தை ஒப்புக் கொண்டு நீதித்துறை நீதிமன்றத்தில் அபராதம் செலுத்திவிட்டு தற்போது இந்த இழப்பீட்டு வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கை நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். விபத்து நடைபெற்ற தேதியில் எங்கு இருந்து எந்த ஊருக்கு நடை எடுத்து சென்றேன் என்றால் பழனியில் இருந்து சிதம்பரத்திற்கு நடை எடுத்து சென்றேன். சிதம்பரத்திற்கு செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும் எத்தனை நிறுத்தங்கள் இருக்கும் என்றால் 10 மணி நேரம் ஆகும், எவ்வளவு பேருந்து நிறுத்தம் உள்ளது என்று குறிப்பாக சொல்லமுடியாது. பயணிகள் இருக்கும் இடத்தில் அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும். நடைஎடுப்பு சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாக சென்றால் ஊக்கத்தொகை எதுவும் வழங்கப்படுமா என்றால் இல்லை. காலதாமதமாக சென்றாலோ அபராதம் எதுவும் விதிக்கப்படுமா என்றால் இல்லை. விபத்து நடைபெற்ற போது 08.45 மணி இருக்கும் என்றா்ல சரிதான். அப்போது அனைவரும் பள்ளிக்கு மற்றும் அலுவலகத்திற்கு செல்வதால் அந்த சாலை அதிக ஜன நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். அதனால் அந்த நேரத்தில் வேகமாக பேருந்தை இயக்க முடியாது. ஒவ்வொரு பேருந்து நிறுத்தத்திலும் நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டு பயணிகளை ஏற்றிக் கொண்டு வேகமாக நடைஎடுப்பு சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் உரிய நேரத்தை அடைக்கூடிய போக்குவரத்து நெறிசலும் அதிகவேகமாக ஓட்டி சென்று இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வேகமாக ஓட்ட முடியாது. அன்றைய தினம் அந்த பேருந்தின் நடைஎடுப்பு சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்மீது தவறு இருக்கிறது என்பதால் தான் அந்த நடைஎடுப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் மனுதாரர் அவரே தவறி கீழே விழுந்துவிட்டார் என்றும் இந்த விபத்திற்கும் நான் ஓட்டிய பேருந்திற்கும் எந்தவித சம்மந்தம் இல்லை என்றும் மனுதாரரின் மனைவி தான் என்மீது பொய்யான புகார் கொடுத்து பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அதே போன்று நீதிமன்றத்தில் இருந்து இழப்பீட்டு மனுவிற்கான அறிவிப்பு வந்ததற்கு பின்னிட்டும் குற்றப்பத்திரிக்கை எனக்கு எதிராக தாக்கல் செய்த பிறகும் அதற்கு பின்னிட்டு என்மீது எந்த தவறும் இல்லை என்றும் அந்த பேருந்து விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றும் எதாவது புகாரோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் தனிப் புகார் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடைபெற்ற நேரத்தில் மனுதாரர் தலைக்கவசம் அணிந்து சாலை விதிகளை பின்பற்றியும் கவனமாக ஓட்டிச் சென்றார் என்றும் நான் தான் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் நான் ஓட்டிச் சென்ற பேருந்தை ஓட்டி எனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற பேருந்தில் எந்தவித சேதாரமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பேருந்தின்

முன்பக்க பம்பர் மற்றும் டயரில் தான் காயம் உள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது அதிவேகம் மற்றும் அஜாகிரதை தான் காரணம் என்பதாலும் எனது பொறுப்புடைமையின் அடிப்படையில் நான் பணிபுரியும் நிர்வாகம் தான் மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை செலுத்த கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.08.14 18:06:05 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்